முதுமொழிக் காஞ்சி

அம்சவேணி பெரியண்ணன் உரை

முதுமொழிக் காஞ்சி

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

முதுமொழிக் காஞ்சி அம்சவேணி பெரியண்ணன் ❐ அம்சவேணி பெரியண்ணன் ❐ பதிப்பு : 2019 ❐ பக்கங்கள்: 56 ❐ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❐தொலைபேசி:42070663 ❐ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❐ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.50.00

பதிப்பாளர்: **டாக்டர்.பெ.மயிலவேலன்,**
M.Sc., M.Ed., M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது; தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர்.பெ.மயிலவேலன், **M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.**

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr.P.MAILAVELAN, M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D. Chennai.**

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

MUTHUMOZHI KANCHI HAMSAVENI PERIANNAN URAI ❐ HAMSAVENI PERIANNAN ❐ Edition: 2019 ❐ Pages: 56 ❐ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❐ Phone: 42070663 ❐ Typeset: Latha Computer, Chennai ❐ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 50.00**

Publisher: Dr.P.MAILAVELAN,
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

> "நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
> கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதுமொழிக் காஞ்சி என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமை யாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதியுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப் பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித் துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	சிறந்த பத்து	...	7
2.	அறிவுப் பத்து	...	13
3.	பழியாப் பத்து	...	18
4.	துவ்வாப் பத்து	...	23
5.	அல்ல பத்து	...	27
6.	இல்லைப் பத்து	...	33
7.	பொய்ப் பத்து	...	39
8.	எளிய பத்து	...	44
9.	நல்கூர்ந்த பத்து	...	49
10.	தண்டாப் பத்து	...	53

[illegible] இந்நூலுக்கு நூல்களின் [illegible] என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், [illegible] [illegible] 3000க்கும் மேற்பட்ட நூல்களை [illegible]

இந்நூல் கடல் நீரை [illegible] கொடுக்கப் பெற்றுள்ளது. [illegible] கட்டுமாக்கித் தரப்பெற்றுள்ளது. [illegible] பயன் பெறுவீர்!!

முதுமொழிக் காஞ்சி

1. சிறந்த பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை. 1

விளக்கவுரை

ஆர்கலி என்பதற்கு ஒலிக்கும் அலைகளை உடைய சமுத்திரம் என்பது பொருள். இந்தக் கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களுக்கு நூல்களை கற்கும் அறிவைவிட நல்லொழுக்கம் உடையவராக இருத்தலே மேலான சிறந்த வாழ்க்கை நெறியாகும். கல்வி கற்ற அறிஞரைவிட கல்வி எதுவும் கற்காத பாமரன் ஒழுக்கமுடன் வாழ்ந்தால் அவனே கற்றவனைவிட சிறந்தவன் என்பது பொருளாகும். நூல்களை கற்றவர்கள ஒழுக்கக் கேடர்களாக இருந்தால் அந்த கல்வியால் அவர்கள் எப்பயனும் பெறவில்லை என்றே சொல்லவேண்டும். ஆகவே, ஒழுக்கம்தான் எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை முதுமொழிக் காஞ்சி அறிவுறுத்துகிறது.

அ.பொ.

ஆர்கலி-ஒலிக்கும் கடல். ஓதலில்-நூலறிவு. ஒழுக்கம் உடைமை-நல்லொழுக்கமுடன் வாழுதல்.

காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல். 2

விளக்கவுரை

அன்புப் பாராட்டப்படுவது சிறந்ததுதான். ஆனால், அதைவிட சிறந்தது பிறர்கண்டு அஞ்சும் அளவுக்கு மதிப் புடையவராக இருப்பதே ஆகும். இங்கே அஞ்சுதல் என்பது கொடியவர் என்று அஞ்சுதல் அல்ல. அவரிடம் உள்ள நற்குணங்களைக் கண்டு அச்சமும் மரியாதையும் கொள்வது என்பது பொருளாகும்.

அ.பொ.

காதலில்–அன்பு பாராட்டப்படுவதிலும். கண்ணஞ்சப்படுதல்–கண்டு பயப்படுவது.

மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை. 3

விளக்கவுரை

அறிவுடையவராக இருப்பதைக் காட்டிலும் சிறந் ததுதான் கற்றதை மறவாதிருத்தல் ஆகும். அறிவைத் தாண்டி நம்மை அழைத்துச் செல்லும் ஞான நூல்களைக் கற்பதே உண்மையான கல்வி. ஆகவே,வ அறிவைவிட இந்த ஞான பொக்கிஷக் கல்வியை மறவாமல் செயல் முறைக்கு கொண்டு வரவேண்டும். அதாவது, தூய்மை, பொறுமை, தவம், யோகம் இவைகளில் செயிலில் பயிற்சி செய்து எல்லாத் துன்பங்களையும், மரணத்தை யும் வெல்ல வேண்டும் என்பது பொருளாகும்.

அ.பொ.

மேதையில்–அறிவில். சிறந்தன்று–சிறந்தது. உடைமை–மெய்யறம். பேணு–உண்மை பேசும் உண்மை.

வண்மையில் சிறந்தன்று வாய்மை உடைமை. 4

விளக்கவுரை

செல்வ பலம், கொடைத்தன்மை, இரக்க மனம் ஆகியவற்றைக் காட்டிலும் உண்மை பேசும் உண்மை உடையவராய் இருத்தல் சிறந்தது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

உண்மை என்பதற்கு பொருள் நாம் யார்? என்பதை உள்ளது உள்ளபடியே அறியும் உண்மை யாகும். பொய்யான கருத்துக்களை மதத்தில் புகுத்தும் நூல்கள் பொய்யானவை. நாம் அழியா ஆத்மா. நமக்கு மரணம் என்பது இல்லை என்பதே உண்மை. இந்த உண்மை உள்ளம்தான் எல்லா சிறப்புகளைவிட மிக, மிக சிறந்தது என்பது பொருளாகும்.

அ.பொ.

வண்மை-செல்வம்மது அல்லது கொடை. சிறந்தன்று-சிறந்தது. வாய்மை உடைமை-மெய்யறம். பேணும்-உண்மை.

இளமையில் சிறந்தன்று மெய்ப்பிணி இன்மை. 5

விளக்கவுரை

வாலிபம் என்பது வாழ்வில் இனிப்பானதுதான், சுகமானதுதான். ஆனால், அதனிலும் சிறந்தது மகிழ்ச்சியானது நோய் நொடியின்றி உடல் நலத்தோடு இருத்தல் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

இதனையே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சுருங்க கூறியிருக்கிறார்கள். இளமை இருந்து உடல் நோயால் தாக்கப்பட்டால் அந்த இளமையால் பயன் இல்லை. நோயற்ற உடல் மூலமாகவே உடல் பலம் அடையும். பலம் இருந்தால்தான் உள்ளிருக்கும் ஒளியை காணமுடியும். ஆகவே, இளையைவிட உடல் நலமே மிகச் சிறந்தது என்பது பொருளாகும்.

அ.பொ.

இளமையில்-இளமைப் பருவத்திலும். சிறந்தன்று-சிறப்புடையது. மெய்-உடம்பு. பேணி-நோய் இன்மை இல்லாமல் இருப்பது.

நலன் உடைமையின் நாணுச் சிறந்தன்று. 6

விளக்கவுரை

நலன் என்பதற்கு இங்கு எழில் அல்லது அழகு என்று பொருளாகும். சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்ய அஞ்சி ஒதுங்குதல்தான் அழகைவிட சிறந்தது. தீயச் செயல்கள் செய்ய வெட்கப்படுவதுதான் அழகு. மேல்அழகால் பயனில்லை. செயல் அழகே உண்மை அழகு என்பது உட்கருத்து. செயல்தான் நம் வாழ்க்கையை தீர்மானம் செய்கிறது. ஒருவர் செய்த செயலின் பயனை அனுபவவித்து முடிக்காமல் அந்த செயலை எவராலும் அழிக்க முடியாது. ஆகவே, நல்ல செயல்களை செய்தால் எப்போதும் நன்மையே வரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

நலன்-அழகு. நாணு-வெட்கப்படுதல். சிறந்தன்று-மிகச் சிறந்தது.

குலன் உடைமையில் கற்பு சிறந்தன்று. 7

விளக்கவுரை

ஒருவருக்கு உயர்குடியில் பிறந்தவர் என்ற பெருமையைவிட கல்வி அறிவுடையவர் என்பது மிகவும் சிறந்தது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

கல்வி கற்றவர்தான் அறிவு மிகுந்தவராக இருப்பார். நல்லறிவுதான் நம் எல்லாத் துன்பங்களையும் நீக்கி விடுதலை தருவது விடுதலை என்பது பிறப்பு. இறப்பி லிருந்து விடுதலை மரணத்திலிருந்து விடுதலை. அச்சத்திலிருந்து விடுதலை உயர்குடியில் பிறந்து விட்டு

அறிவில்லாத மூடராக இருந்து எந்த பயனும் இல்லை என்பது பொருளாகும்.

அ.பொ.

குலன்–உயர்குடியில் பிறந்திருத்தல். கற்பு – கல் + பு = கல்வி உடைமை. சிறந்தன்று–சிறந்ததாகும்.

கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று. 8

விளக்கவுரை

பல நூல்களைக் கற்றுத் தேர்வதைக் காட்டிலும், பல நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவில் மிக்கோரை பின்பற்றி நடத்தல் மிகச் சிறந்ததாகும் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

பல நல்ல நூல்களை கற்பது சிறந்ததுதான். அதை விட கற்றறிந்த சான்றோர்களை பணிந்து அவர் வழியில் செயல்படுவது சாலச்சிறந்தது. ஏனெனில் தூயவர்களின் வழியை பின்பற்றினால் அத்தூயவர்களின் ஆசீர்வாதமும் நமக்கு துணை செய்யும். தூயவர்களின் அனுக்கிரகம் மிகப் பெரிய பாவியை விட சுத்தமானவனாக மாற்றி விடும். அதனால்தான், சத்சங்கம் வலியுறுத்தப்படுகிறது. பெரியோர் வழியில் நடப்பவர் எல்லா சித்திகளையும் விரைவில் பெறுவார் என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

கற்றலின்–பல நூல்கள் கற்று தேர்வதைக் காட்டிலும். வழிபடுதல்–பின்பற்றுதல்.

செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று. 9

விளக்கவுரை

பகைவரை தண்டிப்பதைவிட தன்னைப் போருக்கு நன்கு தகுதியுடையவனாக செய்து கொள்ளுதல் மிகச் சிறந்தது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அதாவது, தண்டித்தலுக்குமுன் தன்னை முழுமை யாக பலப்படுத்திக் கொண்டால் பகைவன் தண்டிப்ப தற்கு முன்பே பணிந்து விடுவான். தண்டிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும் என்பது பொரு ளாகும்.

அ.பொ.

செற்றார்-பகைவர். செறுத்தலில்-தண்டிப்பதைவிட.

முன் பெருகலின் பின் சிறுகாமை சிறந்தன்று. 10

விளக்கவுரை

தொடக்கத்தில் உயர்ந்து விளங்கிப் பின்னர் நாளாக... நாளாக தேய்ந்து சிறுமை அடைவதைவிட ஒரு படித்தாய் நிலையில் தாளாது இருப்பதே சிறந்தது. தொடக்கத்தில் உயர்ந்திருந்தாலும் முடிவில் தாழ்வு றாமல் இருக்க வேண்டும் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அதாவது, மிக, மிக உயராமல் போனாலும் பாதக மில்லை. முடிவில் தாழ்வு வரக்கூடாது. முடிவு தான் மனிதனின் மதிப்பை நிர்ணயம் செய்கிறது. உயர்ந்தவன் கீழே விழுந்தால் உலகம் தூற்றும் சாதாரண நிலையில் இருந்து இறுதியிலும் தடுமாற்றம் இல்லாமல் நிலைத்து நிற்பது சிறந்தது. உலகத்தவர் அவனை மதிக்கவே செய்வர் என்பது பொருளாகும்.

அ.பொ.

முன் பெருகலின்-தொடக்கத்தில் உயர்ந்து. பின் சிறுகாமை-இறுதியில் தாழ்வுறாமல்.

2. அறிவு பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப. 1

விளக்கவுரை

சமுத்திர நீரால் சூழப்பட்ட இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் அவர்கள் பிறந்த குலத்தின் பெருமைகளை அம்மக்கள் இயல்பாக கொண்டுள்ள இரக்க குணம், கருணை உள்ளம் இவற்றைக் கொண்டே அறியப்படுவர் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அந்தணன் என்பதற்கு பொருள் சுத்தமானவன் என்பதுதான் பொருள். எவன் தூய்மையானவனோ, அவனே அந்தணன். அதேபோல் இரக்க குணமும், கருணை உள்ளமும் கொண்ட மனிதர்கள்தான் நல்ல குலத்தவர்கள் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அ.பொ.

ஆர்கலி–ஒலிக்கும் அலைகளையுடைய. பேரில்–புகழில். ஈரம்–இரக்க குணம்.

ஈரம் உடைமை ஈகைமை அறிப. 2

விளக்கவுரை

ஒருவர் இயல்பாகவே இரக்க குணம் உள்ளவர் என்பதை அறிய அவர் மற்றவர்க்கு கொடுத்து உதவும் குணத்தைக் கொண்டே அறியலாம் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

பகைவரே ஆனாலும்கூட அவருடைய வறுமை கண்டு இரங்குதல் என்பது கருணையுள்ளவரின் சிறந்த குணமாகும். இந்த அடையாளங்களைக் கொண்டே அவருடைய கருணை உள்ளத்தை அறியலாம் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஈரம்-இரக்க குணம். ஈகை-இல்லையொன்று வருவோர்க்கு கொடுத்துதவுவது.

சோரா நன்நட்பு உதவியின் அறிப. 3

விளக்கவுரை

ஒருவர் மற்றவரிடம் தொய்வில்லாத, தொடர்ந்த உறுதியான நட்புடையவராக இருப்பதை அவர் தன் நண்பருக்கு செய்யும் உதவியைக் கொண்டே அறியலாம் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அதாவது, நண்பர் துன்பப்படுகிறார் என்பதை அறிந்த அளவில் விரைவில் அதை போக்க முயலுவது உண்மையான நட்பாகும்.

அ.பொ.

சோரா-தளர்வடையாத. உதவியின்-பிறருக்கு செய்யும் உதவி.

கற்றது உடைமை காட்சியின் அறிப. 4

விளக்கவுரை

ஒருவர் கற்றவர் என்பது அவர் பெற்றுள்ள அறிவின் திறம் கொண்டே அறியப்படும் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அறிவின் திறம் என்று கூறியது... அவருடைய பேச்சை வேறு எவரும் மறுத்து கூறமுடியாத சொல் வன்மையைப் பெற்றிருக்கும். சொல்வன்மை என்பது

உண்மையை... யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டது. உண்மை பேசுபவர்கள் மெய் ஞான நூல்களை கசடற கற்றவர்களாகவே இருக்க முடியும். இதுவே அடையாளமாகும்.

அ.பொ.

கற்றது–உடைமை. கல்வி அறிவு நிறையப் பெற்றிருக்கும் தன்மை. காட்சியின்–அறிவால்.

எற்றம் உடைமை எதிர்கோளின் அறிப. 5

விளக்கவுரை

ஒருவருடைய அஞ்சாமை, மனத்துணிவு, புகழ், பெருமை எல்லாம் அவர் எதிர்படும். இடையூறுகளை முன் கூட்டியே சரியாக அறிந்து அவற்றை சமாளித்து அவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும் முறைகளை மேற்கொள்வதிலிருந்தே அறியலாம் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அஞ்சாமை என்பது அசட்டுத் துணிச்சல் அல்ல. துணிந்து எடுக்கும் முடிவுகளால் வெற்றி வரவேண்டும். தனக்கு ஆபத்து நேராமல் தற்காத்துக் கொள்ள வேண்டும். இதுவே உண்மையான அஞ்சாமை, மனத் துணிவு என்பதாகும்.

அ.பொ.

ஏற்றம்–துணிவு, புகழ் எதிர்கொள்ளுதல். எதிர்கோள்– இடையூறு நீக்க செயல்படும்முறை.

சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப. 6

விளக்கவுரை

ஒருவர் இழிந்த பிறப்பை உடையவர் என்னபதை அவர் கொண்ட ஆணவம். தற்பெருமை, தான் எனும் கர்வம் ஆகியவற்றைக் கொண்டே அறியலாம் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் செயற்கரிய செயல் களை செய்தாலும் அடக்கமாக இருப்பார்கள். ஆனால், இழிந்த பிறப்பை கொண்டவர்கள் (நற்குணம் இல்லாத வர்கள்). சிறிய, சிறிய விஷயங்களுக்குகூட தன்னைப் பற்றி தானே புகழ்ந்து தற்பெருமையும், ஆணவமும், கொள் வார்கள். இந்த அடையாளங்களை வைத்தே அவர்கள் இழிந்த பிறப்பானவர்கள் என்பதை அறியலாம்.

அ.பொ.

சிற்றில்–இழிந்தகுடி. பெருமிதம்–செருக்கு, கர்வம்.

குத்திரம் செய்தலில் கள்வனாதல் அறிப. 7

விளக்கவுரை

ஒருவர் மற்றவருக்குச் செய்யும் வஞ்சகச் செயல் கொண்டே அவர் தீயவர். திருடர் என்பதை அறியலாம் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. கபடப் பேச்சு, உள்ளத்தில் பொய், உதட்டில் மெய்போல் பேசி ஏமாற்று தல் ஆகிய குறிப்புகளை வைத்தே ஒருவரை வஞ்சகர் என்று அடையாளம் கண்டு ஒதுக்கலாம் என்பது உட் கருத்து.

அ.பொ.

குத்திரம்–வஞ்சகம். கள்வனாதல்–திருடன் என்பதை. அறிப– அறிவர்.

சொற் சோர்வு உடைமையின் சோர்ப்பும் அறிப. 8

விளக்கவுரை

ஒருவர் பேச்சில் காணப்படும் தளர்வும், தடுமாற் றமும் கொண்டே அவர் மனத்தளவிலும் மற்றும் எல்லாவகையிலும் சோர்ந்து போயுள்ளார் என்பதை அறியலாம் என்பது பொருளாகும்.

சொல்லின் சோர்வு இருந்தால் அவர் மனம் எல்லா வற்றிலும் பாதித்திருக்கிறது என்பதற்கு அடையாள மாகும். சொல் தடுமாற்றம் வந்தால் மனம் தடுமாறும்.

மனம் தடுமாறினால் செயலில் குழப்பம், தெளிவின்மை வெளிப்படும் என்பது கருத்து.

அ.பொ.

சொற்சோர்வு-பேச்சில் தடுமாற்றம். உடைமையின்-மனதளவிலும், மற்ற எல்லா நிலைகளிலும்.

அறிவு சோர்வு உடைமையில் பிறிது சோர்வு அறிப. 9

விளக்கவுரை

ஒருவர் அறிவு தடுமாற்றம் தளர்ச்சி அடைந்திருப் பதைக் கொண்டே அவர் மற்ற எல்லா வகையிலும் உடலாலும், உள்ளத்தாலும் சோர்ந்து தளர்ந்துள்ளார் என்பதை அறியலாம். மனம் சலித்தால் மற்ற எல்லாமும் சலிக்கும். ஆகவே, மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது. உள்ளே இறை ஒளி இருக்கிறது. அதை நினைத் தாலே மனத்தளர்ச்சி அலறியடித்துக் கொண்டு ஓடும்.

அ.பொ.

அறிவு சோர்வு-அறிவில் தடுமாற்றம். பிறிது சோர்பு-உடல், உள்ளம்.

சீருடை ஆண்மை செய்கையின் அறிப. 10

விளக்கவுரை

ஒருவரின் ஆளுமையை, முனைப்பை ஒன்றை செய்து முடிப்பதில் அவருக்குள்ள மனஉறுதியைக் கொண்டே அறியலாம் என்பது பொருள். இடையூறு களைப் பற்றி பொருட்படுத்தாமல் மனஉறுதியுடன் இடையூறுகளை நீக்கி செயல்படும் ஆளுமைத் திறனைக் கொண்டே ஒருவருடைய வீரம் கலந்த ஆண்மையை அடையலாம் கண்டு கொள்ளலாம் என்பதாகும்.

அ.பொ.

சீர்-புகழ், பெருமை. (சீர்=உடை). ஆண்மை-ஆளுமை.

3. பழியா பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
யாப்பு இலோரை இயல்புகுணம் பழியார். 1

விளக்கவுரை

ஒலிக்கும் அலைகளையுடைய சமுத்திர நீர் சூழ்ந்த உலகத்தில் வாழும் மனிதர்கள் எல்லாம் அதாவது, மக்களுக்குள்ளே, ஒன்றில் உறுதியான பிறப்பு இல்லாத நிலை தடுமாறும் குணத்தை இயல்பாகக் கொண்டவர் களை, அவர்களின் அத்தகைய உறுதியற்ற தன்மை கருதி எவரும் பழிக்கமாட்டார்கள் என்பது பொருள்.

எல்லாத் திறமையும் உடையவர்கள் தவறு செய்தால் உலகத்தவர் பழிப்பர். ஆனால் பலவீனம் கொண்ட உறுதியற்றவர்கள் தவறு செய்தால் அது அவர்களின் நிலை இயலலாத நிலை என்று அறிந்து அத்தகையவர்களை பழிக்கமாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆர்கலி-கடல். யாப்பு-உறுதி. பழியார்-கேலிபேசார்.

மீப்பு இலோரை மீக்குணம் பழியார். 2

விளக்கவுரை

மேலான குண நலம் இல்லாதவர்கள் வரம்பு மீறிய செயல்களைச் செய்தால் அதை யாரும் பழிப்பதில்லை. ஏனெனில் அது அவர்களின் குண இயல்பு என்று விட்டு

விடுவார்கள் என்பது பொருளாகும். தீயகுணம் செய்ப வர்கள் வரம்பு மீறி, தருமத்தை மீறி செயல்படுவார்கள். அதை எவரும் பொருட்படுத்த மாட்டார்கள் அவன் கெட்டவன். அந்த புத்திப்படி செய்கிறான் என்று புறக்கணித்து விடுவார்கள் என்பது கருத்து.

அ.பொ.

மீப்பு-மேன்மை. மீக்குணம்-வரம்பு மீறிய செயல்.

பெருமை உடையதன் அருமை பழியார். 3

விளக்கவுரை

பெருமை உடைய ஒரு செயல் அது செய்து முடித் தற்கு அரியது. அருமையானது, எளிதன்று என்பதால் அச்செயலைப் பழித்து தன்முயற்சியை மேலோர் கைவிட மாட்டார்கள் என்பது பொருளாகும். எவ்வளவு சிரமம் இருந்தாலும் விடாமுயற்சி செய்து அச்செயலை முடிப்பார்களே ஒழியே அச்செயலைப் பழித்து தன் முயற்சியை மேலோர் கைவிட மாட்டார்கள் என்பது பொருளாகும். எவ்வளவு சிரமம் இருந்தாலும் விடா முயற்சி செய்து அச்செயலை முடிப்பார்களே ஒழியே அச்செயலை இழித்தோ, பழித்தோ காரணங்கள் கூறி விலகி விட மாட்டார்கள் என்பது கருத்து.

அ.பொ.

பெருமை உடையதன்-பெருமையுடைய ஒரு செயல். அருமை-சிரமம் என்று.

அருமை உடையதன் பெருமை பழியார். 4

விளக்கவுரை

அடைவதற்கு அல்லது பெறுவதற்கு அருமையானது, அடைவது அல்லது பெறுவது எளிதான செயல் அல்ல என்று எண்ணி அதை இகழமாட்டார். முயற்சியை

கைவிடமாட்டார் என்பது பொருளாகும். முந்தைய சொற்களே இதிலும் அடங்கியிருக்கிறது கிடைப்பதற்கு அரிதானது என்று மனம் சோர்ந்து செயலை மேன்மை பொருந்தியவர்கள் கைவிடமாட்டார்கள் என்பது கருத்து.

அ.பொ.

அருமை-சிரமம். பழியார்-இகழமாட்டார்.

நிறையச் செய்யாக் குறைவினை பழியார். 5

விளக்கவுரை

நிறைவாக அதாவது முழுமையாக ஒன்றை செய்து முடிக்காமல் பிரதியிலேயே அரைகுறையாக உள்ள செயலில் உள்ள குறைகளை அல்லது அது செய்து முடிக்கப்படாமல் இருக்கின்ற தன்மையை சுட்டிக்காட்டி பெரியோர் பழி கூறமாட்டார்கள் என்பது கருத்து.

அ.பொ.

நிறைய-நிறைவாக. குறைவினை-குறைகள் கூறி.

முறைஇல் அரசர் நாட்டிருந்து பழியார். 6

விளக்கவுரை

ஆட்சி முறைமை இல்லாத அதாவது நீதிநெறி தவறிய மன்னன் ஆளும் ஒரு நாட்டில் இருந்து கொண்டு அவ்வரசனுடைய நீதி, நெறி தவறிய ஆட்சி முறையை பழித்துப் பேசமாட்டார்கள். ஏனெனில் அரசன் கொடுங் கோலன். பழித்துப் பேசுவதால் மேலும் துன்பம் தான் வரும். பரிகாரம்வராது என்பதால் பழிப்பது பயனற்றது என்பதை அறிந்து பழிக்கமாட்டார்கள் என்பதாம்.

அ.பொ.

முறைஇல்-ஆட்சி முறைமை இல்லாத. அரசன் நாட்டி லிருந்து-கொடுங்கோலன் நாட்டிலிருந்து கொண்டு.

செயத்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார். 7

விளக்கவுரை

தனக்கு உதவ வேண்டிய, உதவக் கடமைப்பட்ட உறவினர் அந்த சமயம் உதவாமல் போனால் ஐயகோ... உறவினர்கூட நமக்கு உதவவில்லையே என்று அவர் களை இழித்தோ... பழித்தோ பேச மாட்டார்கள். பெரியோர்கள் வினைப் பயன் வரும்போது அதை மீறி எதுவும் நடக்க முடியாது என்பதை அவர்கள் அறி வார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

செயத்தக்க-செய்ய வேண்டிய. செய்யாமை-உதவி செய்யாமை.

அறியா தேசத்து ஆசாரம் பழியார். 8

விளக்கவுரை

ஒவ்வொரு நாட்டுக்கும், மதத்துக்கும் இனத்துக்கும் என்று ஒழுக்கநெறிகள் வேறுவேறாக இருக்கும். வித்தியாசமாகக் கூட இருக்கும். ஆகவே, முன் பின் அறியாத ஒரு நாட்டிற்கு போய் அங்குள்ள ஆசார ஒழுக்கங்கள் தம்முடையது போல் இல்லையே... வேறாக இருக்கிறதே என்று அறிவுடையோர் அவற்றைப் பழித்து பேசமாட்டார்கள் என்பது பொருளாகும்.

அ.பொ.

அறியா தேசம்-அயல்நாட்டு. ஆசாரம்-நடைமுறை ஒழுக்கம்.

வறியோன் வள்ளியன் அன்மை பழியார். 9

விளக்கவுரை

தனக்கே ஏதுமில்லாத வறியவனாகிய ஏழை பிறருக்கு கொடுத்துதவும் கொடையாளியாக இல்லையே

என்பதை எண்ணி அறிவுடையோர் அவளை இகழ மாட்டார்கள் என்பது பொருளாகும்.

தன்னிடம் ஏதும் இல்லாதவன் பிறருக்கு கொடுத்து உதவமுடியாது என்பது யதார்த்தமான ஒன்று. அறிவிலிகள் இதைக்கூட அறியமாட்டார்கள். அறிவுடைய பெரியோர்கள்தான் இவற்றை அறிந்து அத்தகையவர்களை பழிக்கமாட்டார்கள் என்பது கருத்து.

அ.பொ.

வறியோன்-செல்வம் இல்லாதவன். வள்ளியன்-கொடையாளி. அன்மை-அல்லாமை.

சிறியார் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார். 10

விளக்கவுரை

ஒழுக்கத்தில் சிறந்து உயர்ந்த பெரியோர்களில், கீழ் மக்களின் ஒழுக்கக் கேட்டை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். பழிக்கவும் மாட்டார்கள். ஏனெனில் கீழோர் செயல் கீழ்மையாகவே இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள் என்பது கருத்து.

அ.பொ.

சிறியோர்-சிற்றினத்தார். கீழ்மக்கள்-ஒழுக்கக்கேடானவர்கள்.

4. துவ்வாப் பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
பழியோர் செல்வம் வறுமையில் துவ்வாது. 1

விளக்கவுரை

அலை ஒலிக்கும் சமுத்திர நீரால் சூழ்ந்த உலகத்தில் வாழும் மக்களுள் எல்லாம் பழிக்குக் இடமான செல்வம் வறுமைத் தளத்தில் இருந்து தப்பி பிழைக்காது. பழிக்கப் பட்ட செல்வம் தனக்கும் பயன்படாமல், பிறருக்கும் பயன்படாமல் வறுமையால் சூழும் என்பது பொருளாகும். நல்வழியில் ஈட்டிய செல்வமே தனக்கும் பயன் படும். பிறருக்கும் பயன் தரும் என்பது உட்பொருளாகும்.

அ.பொ.

பழியோர் செல்வம்–தீயவழியில் ஈட்டிய செல்வம். ஆர்கலி– ஒலி செய்யும் அலையுடைய கடல்.

கழி தறுகண்மை பேடியில் துவ்வாது. 2

விளக்கவுரை

எதையும் காலம் அறிந்து இடம், பொருள், ஏவல் உணர்ந்து செய்யவேண்டும். அப்படி இல்லாமல் வீறாப் புடன் ஒரு செயலைச் செய்ய முற்பட்டால் அது வெற்றி பெறமுடியாது. தோல்வியால்தான் முடியும். அது ஆண்மைக்கு அழகல்ல. பேழமையே ஆகும். அது ஒரு செயலை கால நேரம் தெரியாமல் செயலைத் தொடங்கி தோல்வியை தழுவுவது பேழமை என்பது கருத்து.

அ.பொ.

கழி–மிகுதி. தறுகண்மை–வீரம். பேடி–ஆண்மை இன்மை.

நாண்இல் வாழ்க்கை பசித்தலில் துவ்வாது. 3

விளக்கவுரை

பசித் துன்பம் உணவு உண்டால் நீங்கும். ஆனால், வெட்கம் இகழ்ந்தவர் படும் துன்பம் உயிர் விட்டாலும் மறையாது. ஆகவே, பசித்தலில் கொடியது நாணம் இல்லாத வாழ்வு என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. பசித் துன்பத்தைவிட கொடியது வெட்கம் விட்ட வாழ்க்கை. தன்மானம் தான் உயிர்க்கு மரியாதை தருவது. வெட்கம் கெட்டு வாழ்வது இறந்தாலும் பழி மாறாத துன்பம் என்பது கருத்து.

அ.பொ.

நாணுதல்-தீய செயல் செய்ய வெட்கப்படுதல். துவ்வாது-நீங்காது.

பேண் இல் ஈகை மாற்றலில் துவ்வாது. 4

விளக்கவுரை

ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவும்போது அன்போடு தரவேண்டும். அப்படி இல்லாமல் போ என்று சொல்வது போன்றதுதான். கொடுப்பதை உள்ளன்போடு வழங்க வேண்டும். வேண்டாவெறுப்புடன் கொடுப்பது எந்த பயனையும் தராது என்பது கருத்து.

அ.பொ.

பேணுதல்-போற்றுதல், மதித்தல். இல்-இல்லா. ஈகை-கொடை.

செய்யாமை மேற்கோள் சிதடியில் துவ்வாது. 5

விளக்கவுரை

செய்யக்கூடாத ஒரு செயலை செய்வோம் என்று செய்ய முற்படுவது (மேற்கோள்) அறியாமை அல்லாது

வேறல்ல... செய்து முடித்து வெற்றி தரக்கூடிய காரியங்களையே செய்ய வேண்டும். முடியாத காரியத்தை செய்வேன் என்று வீராப்பு பேசி அதனை செய்ய முற்படுவது அறியாமை என்பது கருத்து.

அ.பொ.

செய்யாமை–செய்யக் கூடாதவை. சிதடி–அறிவின்மை.

பொய் வேளாண்மை புலைமையில் துவ்வாது. 6

விளக்கவுரை

ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவுதல் அல்லது உபகாரம் செய்வது என்பது உள்ளன்போடு, மனப்பூர்வமாக செய்ய வேண்டும். அப்படியில்லாமல் ஒப்புக்கு கடனே என்று செய்வது இழிவான செயலாகும். உதவி என்பது அன்போடு அளிப்பதாக இருக்க வேண்டும். ஒப்புக்கு தருவது இழிவுடையவர்களின் செயல். அப்படிப்பட்டவர்களுக்கு எந்த பயனும் கிட்டாது என்பது கருத்து.

அ.பொ.

பொய்–பொய்யான... அல்லது போலியான வேளாண்மை. உதவி–உபகாரம்.

கொண்டு கண்மாறல் கொடுமையில் துவ்வாது. 7

விளக்கவுரை

ஒருவருடன் நட்பு கொண்டு, அன்போடு பழகி விட்டு பின்பு அவரிடம் அன்பு காட்டாமல் இருப்பது முன்பு நாட்பு கொண்டவருக்குக் கொடுமை செய்திடும் துன்பம் தரும். ஆகவே, நட்பு கொண்டு விட்ட பிறகு அந்த நட்பை கைவிட்டு அன்பு பாராட்டாமல் இருக்க முடியாது என்பது பொருளாகும்.

அ.பொ.

கொடுமை செய்திடும்–துன்பம் தந்திடும். துவ்வாது–நீங்காது.

அறிவிலி துணைப்பாடு தனிமையில் துவ்வாது. 8

விளக்கவுரை

அறிவற்ற ஒருவனை துணையென்று ஏற்றுக் கொணடுஅவனோடு இருப்பது தனித்திருப்பது போன் றதுதான். அந்த அறிவிலியின் துணையால் ஒரு பயனும் உண்டாகாது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. அறிவிலியை துணையாக் கொண்டால் துன்பம்தான் வரும். எந்த பயனும் நேராது என்பது கருத்து.

அ.பொ.

அறிவிலி-அறிவில்லாத ஒருவனை. துணைப்பாடு-துணையென்று.

தான் ஓர் இன்புறல் தனிமையில் துவ்வாது. 10

விளக்கவுரை

தான் ஒருவன் மட்டுமே உண்டு களித்து இன்புற்று இருப்பது என்பது தனித்து வறுமையில் வாடுவது போன்றதேயன்றி வேறல்ல. எவருக்கும் உதவாமல் தானே உண்டு களித்திருப்பவன் பொருள் இருந்தும் ஏதுமில் லாமல் தனிமையில் தவிக்கும் வறியவன் நிலைக்கு ஒப்பானவன் என்பது பொருளாகும்.

அ.பொ.

தான் ஓர்-தான் ஒருவன் மாத்திரமே. இன்புறல்-இன்பத்தில் திளைத்திருத்தல்.

5. அல்ல பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
நீர் அறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள். 1

விளக்கவுரை

ஒலிக்கும் அலைகளையுடைய சமுத்திரம் சூழ்ந்த உலகத்தில் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் கொண்ட கணவன் குண இயல்பு தெரிந்த, அதற்கு ஏற்ப நடவாதவள் அவனுக்குத் தகுந்த துணைவி கிடையாது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

கணவனக்கு கட்டுப்படாதவன். நேர்மாறாக பேசுப வன், அவனுடைய துன்பங்களில் பங்கு ஏற்காதவன் ஆகிய தீயகுணங்கள் உடையவன் மனைவி என்ற தகுதியற்ற வன் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆர்கடல்-கடல். நீர்-நீர்மை, இயல்பு. தாரம்-துணைவி.

தாரணம் மாணாதது வாழ்க்கை அன்று. 2

விளக்கவுரை

நல்ல குணநலன்களால் போற்றப்படும் சிறப்பும் பெருமையும் உடையவனாக வாழ்க்கைத் துணைவி அமையவில்லையென்றால் அது மனைவாழ்வு அல்ல என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

இல்லற தருமம் என்பது முக்திக்கு படியாக இருப் பது. அந்த இல்லற தர்மத்தை கடைபிடிக்காத மனைவி

நரகத்தில் விழுகிறாள். பிறருக்கு நன்மைகள் செய்து, கணவன் மனம் கோணாமல் நடந்து, விருந்தினரை போற்றி வாழும் நற்குணம் இல்லாத மனைவி இல்லறத் திற்கு ஏற்றவன் அல்ல. அது வாழ்வு ஆகாது என்று கூறியது இந்த அடிப்படையில்தான்.

அ.பொ.

தாரம்–மனைவி. மாணாதது–பெருமை இல்லை. வாழ்க்கை–இல்வாழ்வு.

ஈரம் இல்லாதது கிளை நட்பன்று. 3

விளக்கவுரை

அன்பில்லா மனம் உடையவர் நல்ல சுற்றம் ஆக மாட்டார். இனிய நண்பராகவும் ஆகமாட்டார். அன்பு மனம் உடையவரே நல்ல நண்பர் ஆவார். இனிய சுற்ற மாவார் என்பது பொருளாகும். அன்புதான் கடவுள். அன்பே தெய்வம் என்று கூறியிருப்பது இந்த அடிப் படையில்தான். ஆகவே, அன்பு இல்லாமல் உதட்டால் இனிய மொழிகள் பேசுபவர் உண்மை சுற்றம் இல்லை. உண்மை நண்பரும் அல்ல என்பது பொருளாகும்.

அ.பொ.

ஈரம்–இரக்க குணம். கிளை–சுற்றம்.

சோராக் கையன் சொல்மலை அல்லன். 4

விளக்கவுரை

பிறருக்கு எதையும் கொடுத்து உதவும் கை நெகிழ்ச்சி இல்லாதவன் உயர்ந்த மலை போன்ற புகழுக்கு உரியவன் ஆகமாட்டான் என்பது பொருளாகும். கர்ணன் துரியோ தனன் பக்கம் சேர்ந்தபோதும் அவனிடம் பிறருக்கு இல்லை என்று கூறாது கொடுக்கும் கொடைத் தன்மை இருந்தது. அதனால்தான் மலை போன்ற புகழுக்கு

அவன் உரியவன் ஆனான். ஆனால், பிறருக்கு உதவுவதே புகழுக்கு காரணம் என்பதை அறிதல் வேண்டும்.

அ.பொ.

சோராக் கையன்-பிறருக்கு கொடுத்து உதவாதவன். சொல்-புகழ்.

நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன். 5

விளக்கவுரை

ஒத்துப்போகும் குணமுடைய மனம் இல்லாதவன் நல்லநண்பன் ஆகமாட்டான். மனஒற்றுமையே நட்புக்கு மணிமகுடம் என்பது பொருளாகும். உறவினர்கள் ஒவ்வொருவரும் அறிவாளிகளாக இருக்கலாம். ஆனால், அவர்களிடம் ஒத்துப்போகும் பண்பு இல்லாதவிட்டால் அந்த குடும்பம் எந்தநேரத்திலும் சிதறிவிடும். அதேபோல் நல்லநட்பு என்பது விட்டுக்கொடுத்து, ஒத்துப் போவதில்தான் சிறப்பு இருக்கிறது என்பது பொருளாகும்.

அ.பொ.

நேரா-ஒத்துப்போகும். நட்டோன் அல்லன்-நண்பன் அல்ல.

நேராமல் கற்றது கல்வி அன்று. 6

விளக்கவுரை

கற்பிக்கும் ஆசிரியனக்கு குருகாணிக்கையாக, ஒன்றும் கொடுக்காமல் கற்றுக் கொண்டது. பெற்ற கல்விச் செல்வம் ஆகாது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. ஏகலைவன் குருகாணிக்கையாக தன் கட்டை விரலையே கொடுத்தான். அவனுடைய குரு பக்தியே அவனை சிறந்த வில்லாளியாகவும், புகழுக்குரியவனாகவும் ஆக்கியது என்பதை அறிய வேண்டும்.

அ.பொ.

நேர்தல்-கொடுத்தல். நேராமல்-ஒன்றும் கொடுக்காமல்.

வாழமல் வருந்தியது வருத்தம் அன்று. 7

விளக்கவுரை

தன் வாழ்வையே பெரிதாக நம்பிக்கொண்டு தனக்கென வாழாமல் மற்ற உயிர்களுக்காக துன்பத்தை ஏற்பது என்பது வருத்தம் தரக்கூடியது அல்ல என்பது பொருள். சாத்தானுக்கு கடவுளுக்கு உள்ள எல்லா வல்லமையும் உண்டு. ஆனால் ஒரேஒரு வேறுபாடுதான்.

கடவுளிடம் சுயநலம் இல்லை. சாத்தான் சுயநலத்தின் மறுவடிவும். அதனால்தான் அது கடைசி வரை சாத்தா னாகவே இருக்கிறது. ஆகவே, சுயநலம் இருந்தால் மனிதன் சாத்தானாகி விடுகிறான். சுயநலத்தைத் துறந்து பிற உயிர்கள் வாழ தான் துன்பம் ஏற்பவனாக இருந்தால் தெய்வமாகிறான். இதுவே வேதத்தின் சாரம். நாம் தெய்வ வடிவைப் பெறுவதற்காகவே மண்ணுலகு வந்திருக்கிறோம். பிறருக்கு நீங்கள் உதவி செய்ய, செய்ய சிங்க நிகர் ஆற்றி வருவதை அறிவீர்கள். நீங்கள்தான் தெய்வ வடிவம் என்பதையும் புரிந்து கொள்வீர்கள்.

அ.பொ.

வாழாமல்–தனக்காக வாழாமல். வருத்தம் அன்று–வருத்தம் ஆகாது.

அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று. 8

விளக்கவுரை

நீதிநெறிமுறை வழியே பிறருக்கு ஒன்றை கொடுத்து உதவாதது கொடை அல்ல. அப்படி கொடுக்கும்போது உரிய நெறிமுறைகளுடனேயே கொடுத்துதவ வேண்டும். வறுமையில் வாடுபவர்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்குவது சிறப்பாகும். கொடைப் பண்பு சிறந்ததுதான். அக்கொடையும் நெறிமுறைப்படி இருத்தல் வேண்டும்.

வேறு எதையோ எதிர்பார்த்து கொடை அளிக்கக் கூடாது. வறுமையில் வாடி இருப்பவர்களுக்கு உடனே உதவி செய்யாது, காலம் தாழ்த்தக் கூடாது என்பது பொருளாகும்.

அ.பொ.

அறம்–நெறிமுறை. ஆறு–வழி. ஈகை–கொடுத்துதவுவது.

திறத்தாற்றின் நோலாதது நோன்பன்று. 9

விளக்கவுரை

அவரவர்குரிய குலமுறைப்படி மேற்கொண்டிருப் பதே விரதம் ஆகும். மற்றவை நோன்பாகாது என்பது பொருளாகும். சிவகோத்திரம், விஷ்ணு கோத்திரம் என்று பலவகை கோத்திரங்கள் இருக்கின்றன. தன் குலத்திற்கு பொருந்தும் கோத்திரத்தின் அடிப்படையில் விரதங்களை மேற்கொள்ள வேண்டும் ஒரு ஆறு பல இடங்களிலிருந்து வந்தாலும் இறுதியில் சமுத்திரத்தில் தான் கலக்கின்றன. ஆகவே, அவரவர் குல ஆசாரப்படி விரதம், தவம் ஆகியவற்றை கடைப்பிடித்தால் ஒரே பால் பொருளை அது அடைகிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அ.பொ.

திறம்–தனக்குரியதான. ஆற்றின்–வழியில். நோலாதது–நோற்காதது. நோன்பு–விரதம்.

மறுபிறப்பு அறியாதது மூப்பு அன்று. 10

விளக்கவுரை

அவரவர் செய்த நல்வினை, தீவினைக்கு ஏற்பப் பிறவி தொடரும். எனவே, மறுபிறப்பு என்று ஒன்று உண்டென்றும், அவரவர் நல்வினை, தீவினைக்கேற்ப அது அமையும் என்பதையும் உணர்ந்து, நல்வினை

செய்யாமலேயே ஒருவன் வாழ்ந்து வயோதிகத்தை அடைதல் மூத்தோன் என்பதற்கு அடையாளம் அல்ல என்பது பொருளாகும். விறகில் எரியும் நெருப்பு பெரியது. தீபத்தில் எரியும் நெருப்பு சிறியது. பெரியது என்பதற்காக விறகில் எரியும் நெருப்பை எவரும் வணங்குவதில்லை. சிறியதாக இருந்தாலும் தீபத்தையே வணங்குகிறோம். அதேபோல் வயதில் மூத்து இருப்பதால் மூத்தோன் ஆக முடியாது. நல்ல செயல்களை வைத்தே அச்சொல் மதிக்கப் பெறும் என்பது கருத்து.

அ.பொ.

மறுபிறப்பு-இறந்த பிறகு மீண்டும் பெறும் பிறவி. மூப்பு-வயோதிகம்.

6. இல்லைப் பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
மக்கள் பேற்றில் பெறும் பேறு இல்லை. 1

விளக்கவுரை

அலை ஒலிக்கும் சமுத்திரம் சூழ்ந்த இவ்வுலகில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் குழந்தைச் செல்வத்தைப் பெற்றிருப்பதற்கு மேலான பெரும் பேறு வேறு இல்லை என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

புத் என்னும் நாகத்திலிருந்து ஒரு மனிதனை விடுவிப்பவன் புத்திரன் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. புத்திரன் இல்லாதவனுக்கு சொர்க்கத்தில் இடம் இல்லை என்றும் சாஸ்திரம் கூறுகிறது. ஆகவே, மக்கட் செல்வம் சிறந்த பேறு என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆர்கலி–கடல். பேறு–மக்கள் செல்வம்.

ஒப்புரவு அறிதலின் தகுவரவு இல்லை. 2

விளக்கவுரை

ஒருவருக்கு ஒருவர் உதவும் உலகியல் கடமை அறிந்து அப்படி வாழ்தலினும் மேலான நற்செயல் வேறு இல்லை என்பது பொருளாகும். ஒருவருக்கு உதவி செய்வது என்பது நமக்கு நாமே உதவி செய்து கொள்வது போல என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதரிடமும் அழியாத ஆத்ம ஒளி இருக்கிறது. அதனால்தான் ஒருவருக்கு செய்யும் நன்மை, தீமை பலமடங்கு பெருகி வந்து நம்மை தாக்கு கிறது. இதையே கர்மவினை என்று சொல்கிறோம். நம் விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். வேறு யாரோ ஒருவர் நம் விதியை வகக்கிறார் என்பது தவறு. இதைப் புரிந்து கொண்டால் மற்றவர்களுக்கு தீங்கு செய்யும் எண்ணம் வராது என்பது கருத்து.

அ.பொ.

ஒப்புரவு–முறைமை அல்லது கடமை. தகுவரவு–தகுந்த செயல்.

வாய்ப்புடை விழைச்சின் நல் விழைச்சு இல்லை. 3

விளக்கவுரை

கணவனும் மனைவியும் கூடி கலந்து மகிழ்ந்து இன்புறும் இணை விழைச்சில் மக்கள் செல்வம் கிடைக்க வேண்டியபடிகூடி மகிழும் கூடலின் மேலான இன்ப முயக்கம். வேறு இல்லை என்பது பொருளாகும்.

தங்களுக்கு சந்ததியாக வரப்போகும் பிள்ளை இந்த மனித சமுதாயத்திற்கு வழிகாட்டும் விதத்தில் பிறக்க வேண்டும் என்று மனதில் நினைத்து கூடும் தம்பதியருக்கு உடல் இன்பம் மட்டுமல்ல... உத்தமமான பிள்ளை பிறப் பதும் உறுதி.

அ.பொ.

வாய்ப்பு–பொருந்த அமைவது. விழைச்சி–கலத்தல். விழைச்சு–கூடுதல்.

வாயா விழைச்சில் தீ விழைச்சு இல்லை. 4

விளக்கவுரை

குழந்தைபேறு வாய்க இடம் இல்லாமல் வெறும் உடல் இன்பம் கருதி கணவனும், மனைவியும் கூடுதல்

தீமையான இன்ப நுகர்ச்சி ஆகும். எனவே, இதைப் போன்ற தீயது வேறு இல்லை என்று முதுமொழிகள் காஞ்சி கூறுகிறது.

அளவோடு குழந்தைகள் வேண்டும் என்ற நோக்கில் பெரும்பாலான தம்பதியர் உடல் இன்பத்தின் பொருட்டே கூறுகின்றனர். இதை எப்படி தடுக்க முடியும்? என்பது தெரியவில்லை. இருப்பினும் அளவான கூடுதல் இருக்கலாம் என்பது கருத்து.

அ.பொ.

வாயா–வாய்க்காத. விழைச்சில்–இன்ப முயக்கம். தீ–தீமையான. விழைச்சு–கூடல்.

இயைவது கரத்தலின் கொடுமை இல்லை. 5

விளக்கவுரை

தன்னிடம் பிறருக்கு கொடுத்து உதவும் அளவுக்கு பொருள் இருந்தும் கொடுக்காமல் மறைத்து வைப்பது கொடிய செயலாகும். பிறருக்கு கொடுப்பதால் செல்வம் கரைந்து விடும் என்று பலர் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறு. பிறருக்கு கொடுக்க... கொடுக்க... ஊற்று நீர் பெருகுவதுபோல் பொருள் வருவாய்க்கான வாய்ப்புகள் பெருகும் என்பதே உண்மை.

அ.பொ.

இயைவது–கொடுத்துதவும் பொருள் இருந்தும் தன்னால் முடியக் கூடியது. காத்தலின்–மறைத்து வைப்பது. கொடுமை–கொடிய செயல். இல்லை–வேறு எதுவும் கிடையாது.

உணர்விலன் ஆதலின் சாக்காடு இல்லை. 6

விளக்கவுரை

ஒருவன் அறிவு வளர்ச்சி இல்லாதவனாக இருப்பதைப் போன்ற துன்பம் எதுவும் இல்லை. உயிர்கள்

சாவை துன்பமாக கருதுகின்றன. இந்த மரணத்தைவிட பெரிய துன்பம் ஒருவன் மூடனாக இருப்பதுதான் என்பது பொருளாகும். அறிவுடையவன் மரணத்தைக் கண்டும் அஞ்சமாட்டான். ஏனெனில் தான் உடலல்ல. அழியாத இறை ஒளியின் ஒரு கூறு என்பது அவனக்குத் தெரியும். ஆனால் அறிவில்லாத மூடன் தினம், தினம் செத்துப் பிழைத்து துன்பம் அடைவான் என்பது கருத்து.

அ.பொ.

உணர்விலன்–உணர்ச்சி இல்லாதவன் அறிவு உணர்ச்சி என்பது இங்கு பொருள். சாக்காடு–மரணம்.

நசையின் பெரியதோர் நல்குரவு இல்லை. 7

விளக்கவுரை

பேராசையைப் போன்ற துன்பம் உயிர்க்கு வேறு இல்லை என்று முதுமொழிகள் காஞ்சி கூறுகிறது. துரியோதனன் பங்காளி சொத்தை அபகரிக்கும் பேராசையால் அழிந்தான். கற்புக்கரசியாகிய சீதையை அடைய பேராசை கொண்ட இராவணன் அழிந்தான். ஆகவே, பேராசை என்பது துன்பத்தை வரவழைத்து அழிக்கும் என்பதை அறியவேண்டும்.

அ.பொ.

நசை–பேராசை. நல்குரவு–வறுமை. பெரியதோர்–பெரிய கேடு என்பது. இல்லை–கிடையாது.

இசையின் பெரியதோர் எச்சம் இல்லை. 8

விளக்கவுரை

ஒருவர் தனக்குப் பிறகு மிச்சமாக வைத்து விட்டுப் போவது புகழ் ஒன்றுதான் மிச்சாக வைத்து விட்டுப் போகவேண்டியது வேறு எதுவும் இல்லை என்பது

பொருளாகும். முதுமொழிகள் காஞ்சியை கூடலூர் கிழார் இயற்றியதால்தான் இப்போதைய மனித சமுதாயம் பயனடைகிறது. அவருடைய இந்த செயல்தான் இன்றுவரை அவருக்கு புகழைத் தருகிறது. அதேபோல் மனித சமுதாயத்திற்கு பயன்படும் விதத்தில் மிச்சம் வைக்கும் நல்ல செயல்களை நாம் செய்ய வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

இசை-புகழ். எச்சம்-மிச்சம். பெரியதோர்-புகழைவிட பெரியது வேறு எதுவும். இல்லை-கிடையாது.

இரத்தலின் ஊங்கு இளிவரவு இல்லை. 9

விளக்கவுரை

பிச்சை எடுத்து உண்டு உயிர் வாழ்தலைப் போன்ற மிகப் பெரிய இழி செயல் வேறு இல்லை என்று முதுமொழிகள் காஞ்சி கூறுகிறது.

பிச்சை எடுத்து சுலபமாக காலத்தை கழித்துவிட லாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஊனமுற்றவர்கள், வேலை செய்யவே முடியாதவர்கள் அப்படி வாழலாம். ஆனால், அறிவு ஆற்றல் இருந்தும், உடல் உறுப்புகள் நன்கு இருந்தும் சோம்பேறித்தனமாக பிச்சை எடுத்து உயிர் வாழ்வது மிக, மிக இழிவாகும். தீவினைகணக்கில் தான் இச்செயல் சேரும்.

அ.பொ.

இரத்தலின்-பிச்சை எடுத்து வாழ்வதைக் காட்டிலும். ஊங்கு-மேம்பட்ட. இளிவரவு-இழிந்த செயல். இல்லை-வேறு இல்லை.

இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பில்லை. 10

விளக்கவுரை

இல்லை என்று வருவோர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்து உதவி பசித் துன்பத்தை தீர்ப்பதிலும் மேலான செயல் வேறு இல்லை என்று முதுமொழிகள் காஞ்சி கூறுகிறது. முந்தைய நீதியில் பிச்சை எடுப்பது இழிவானது என்று கூறிய புலவர் பிச்சை எடுப்பவர்க்கு உதவி செய்வது சிறந்தது என்று கூறுகிறார்.

அதாவது, உழைத்து பிழைக்க முடியாத அவல நிலையில் இருப்பவர்களின் பசித் துன்பத்தைப் போக்க வேண்டும் என்பது உட்கருத்தாகும். பசியால் வருந்துபவர்களுக்கு உணவு அளிப்பது உயிரை காப்பது போன்றதாகும். உயிருக்கு உயிராக இறைவன் அவர்களிடம் இருக்கிறான். ஆகவே, உயிரை காப்பாற்ற நாம் உதவி செய்ய வேண்டும்.

அ.பொ.

இரப்போர்க்கு-இல்லை என்று வருவோர்க்கு. ஈதலின்-உதவி செய்வதைக் காட்டிலும். எய்தும் சிறப்பில்லை-சிறந்த செயல் வேறு இல்லை.

7. பொய்ப் பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
பேர் அறிவினோன் இனிது வாழாமை பொய். 1

விளக்கவுரை

அலை முழங்கும் சமுத்திரம் சூழ்ந்த உலகத்தில் வாழும் மக்கள் எல்லோருள்ளும் மிகுந்த அறிவுடையவனாக இருக்கும் ஒருவன் இன்பமுடன் வாழாதிருக்கிறான் என்பது பொய்யே ஆகும். உலகில் அறிவில் சிறந்தவர்கள் செல்வ செழிப்பில் குறைந்தவர்களாக இருந்தாலும் மனத்தளவில் மகிழ்ச்சியோடும், மனநிறைவாகவும் இருப்பார்கள். ஏனெனில் அறிவு என்பது மெய்ப்பொருள் பற்றி அறிந்தது. மெய்ப்பொருள் செல்வம் இல்லை. அழியாத ஆத்மாதான் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆகவே, தியானம், யோகம் இவற்றில் ஈடுபட்டு நிலையான மன அமைதியை நோக்கி அவர்கள் பயணம் செய்கிறவர்கள் என்பது கருத்து.

அ.பொ.

ஆர்கலி–கடல் சூழ்ந்த. பேர் அறிவினோன்–அறிவில் சிறந்தவன்.

பெருஞ் சீரோன்றன் வெகுளி இன்மை பொய். 2

விளக்கவுரை

செல்வ சீமான் ஒருவன் கோபம் கொள்ளாமல் இருக்கிறான் என்று கூறுவது பொய்த் தோற்றமே ஆகும்.

செல்வம் படைத்தவர்கள் இயல்பாகவே செல்வ செருக்கால் கோபம் உடையவர்களாகவே இருப்பார்கள் என்று முதுமொழி காஞ்சி கூறுகிறது.

அ.பொ.

பெருஞ்சீரோன்–செல்வ சீமான். வெகுளி இன்மை–கோபம் கொள்ளாதிருத்தல்.

கள் உண்போன் சோர்வின்மை பொய். 3

விளக்கவுரை

மது உண்டு மயங்கியவன் உடல் சோர்ந்து உள்ளம் தளர்ந்து மனம் தடுமாறல் இல்லலாது இருக்கிறான் என்பது பொய்யே ஆகும். கள் குடித்தவன் சோர்வு அடைவது இயல்பு. அவன் சுறு, சுறுப்பாய் இருக்கிறான் என்று கூறுவது நம்பத் தகாதது. போதையில் ஏற்படும் வேகம் விவேகமானதாக இருக்காது. அந்த சுறுசுறுப்பு நிலையானது அல்ல என்பது கருத்து.

அ.பொ.

கள்–மது. உண்போன்–குடித்தவன்.

காலம் அறியாதோன் கையுறல் பொய். 4

விளக்கவுரை

ஒரு செயலை செய்து முடிக்க ஏற்ற காலம் எது என்று தெரியாமல் அதைச் செய்யத் தொடங்குபவன். அச்செயலில் வெற்றி பெறுவது, அவனுக்கு செயல் கைகூடி வருவது என்பது பொய்யே ஆகும். காலத்தை பார்க்காமல் செய்யும் செயல் வெற்றியடையாது என்பது கருத்து. காலநேரம் பார்க்காமல் செய்யும் செயல் தோல்வி யில் தான் முடியும்.

மேல் வரவு அறியாதோன் தற்காத்தல் பொய். 5

விளக்கவுரை

எதையும் முன் கூட்டியே ஆலோசித்து அதற்கு ஏற்ப திட்டமிட அறியாதவன், எதிர்வரும் துன்பத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வான் என்பது பொய். போர்களங்களில்கூட வியூகம் அமைத்து தான் வெற்றிக் கனியை பறிக்கிறார்கள். வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் முன்கூட்டியே ஆலோசித்து வியூகம் வகுக்க வேண்டும். எந்த நிலையிலும் வியூகத்தில் நாம் சிக்கிக் கொள்ளக்கூடாது. துன்பங்களை வியூகத்தில் சிக்க வைத்து அழிக்க வேண்டும். வியூகம் இல்லாமல் (திட்டமில்லாமல்) எச்செயலிலும் இறங்கக் கூடாது என்பது கருத்து.

அ.பொ.

மேல்வரவு அறியாதோன்-எதையும் முன்கூட்டியே ஆலோசித்து திட்டம் இடத் தெரியாதவன். தற்காத்தல்-தன்னைப் பாதுகாத்தல்.

உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய். 6

விளக்கவுரை

செய்ய வேண்டியதை செய்யாமல் கோபித்து ஒதுக்குபவன், தனக்குப் பெரும் புகழும், மேன்மையும் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுவது பொய்யே ஆகும். செயல்கள் செய்யாமல் புகழ், மேன்மை கிட்டாது. மேலும், கோபம் என்னும் தீய குணம் உள்ளவனின் செயலில் தெளிவு இருக்காது. அத்தகையவர் புகழ், மேன்மை பெறுவேன் என்று ஆசைப்படுவது பொய் என்று முதுமொழி காஞ்சி கெதளிப்படுத்துகிறது.

அ.பொ.

உறுவினை-செய்யத்தக்கச் செயல்கள். காய்வோன்-செய்யாது வெறுப்பவன்.

சிறுமை நோனாதோன் பெருமை வேண்டல் பொய். 7

விளக்கவுரை

அடக்கமும், பண்பும் கடைபிடிக்காத ஒருவன் தனக்குப் பிறர் தரும் பெருமை வேண்டும் என்று எதிர் பார்ப்பது பொய். அடக்கம்தான் பெருமை தரும். பணிவுதான் புகழைத் தரும். அடக்கமும், பணிவும் இல்லாதவன் பெருமையினை எந்த காலத்திலும் பெற முடியாது என்று முதுமொழி காஞ்சி கூறுகிறது.

அ.பொ.

சிறுமை-பணிவு. நோனாதான்-கைக்கொள்ளாதவன்.

பெருமை நோனாதோன் சிறுமை வேண்டல் பொய். 8

விளக்கவுரை

மற்றவர் தன்னைப் பெரிதாக மதித்துப் போற்றி பெருமை செய்வதை விரும்பாதவன் இழீ செயல் விரும்புவது இழி செயலை விரும்புவது பொய்யாகும் என்று முதுமொழி காஞ்சி கூறுகிறது.

புகழை விரும்பாதவன் எந்த இழி செயலையும் செய்யமாட்டான். அவன் துறவிக்கு நிகரானவன். ஆகவே, அவன் இழி செயல்களை செய்வான் என்று யாராவது கூறினால் அது பொய்யாகவே இருக்கும் என்பது கருத்து.

அ.பொ.

பெருமை-புகழ். நோனாதோன்-விரும்பாதவன்.

பொருள் நசை வேட்கையோன் முறை செயல் பொய். 9

விளக்கவுரை

செல்வத்தின்மேல் பற்றும் அதை அடையவேண்டும் என்னும் ஆசையும் கொண்டிருப்பவன் நீதிநெறிப்படி

நடந்தொழுகுவான் என்பது பொய் என்று முதுமொழி காஞ்சி கூறுகிறது. பண ஆசை கொண்டவன் நீதி... தர்மம்... இவைகளை மீறியாவது பணத்தைக் குவிக்க வேண்டும் என்றே நினைப்பான். பணத்தாசை என்பது உறவு... உண்மை... நேர்மை போன்றவைகளை உதுக்கி விட்டு பணத்திலேயே குறியாக இருக்கும் என்பது கருத்து.

அ.பொ.

நசை–விருப்பம். வேட்கை–ஆசை. முறைசெயல்–நீதிநெறிப் படி நடத்தல்.

வாலியன் அல்லாதோன் தவம் செய்தல் பொய். 10

விளக்கவுரை

மனத்தூய்மை இல்லாதவன் தவம் செய்வது என்பது பொய். தவம் செய்ய புலனடக்கம் தேவை. புலனை அடக்க முடியாதவன் தவம் செய்ய இயலாது. ஆனால், உண்மையிலேயே, தவம் செய்ய விரும்பும் ஒருவன் புலன் அடங்க இறையருளை தியானிப்பவன் யானால் அவன் முயற்சி வெற்றியாகும். உண்மையிலேயே ஒரு நல்ல காரியத்தை செய்ய வேண்டும் என்று விரும்புபவ னுக்கு ஏதேனும் ஒருவழி கிடைத்தே தீரும் என்பதையும் மறக்கக்கூடாது.

அ.பொ.

வால்–தூய்மை. வாலியன்–தூய்மையானவன்.

8. எளிய பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
புகழ் வெய்யோர்க்குப் புத்தேள் நாடு எளிது. 1

விளக்கவுரை

ஒளி முழங்கும் கடல் சூழ்ந்த உலகத்தில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் வானவர் நாடு எளிதாக வசப் படும். அவர்கள் புகழை விரும்புவதால் நல்லறச் செயல் களை செய்வார்கள். அந்த நல்லறச் செயல்கள் செய் வோரை புகழ் சேரும்.

அப்படி புகழ் பெற்றவர்கள் வானுலகப் பேற்றினை எளிதாகப் பெறுவார்கள். புகழ் பெற வேண்டும் என்ற ஆசை காரணமாக நல்லறச் செயல்களை செய்பவர்கள் அதன் பலனை அடைந்தே தீருவார்கள். நீங்கள் செய்த தீவினைகள் தரும் புலிகளைப் போல உங்கள் மீது பாய் வதற்கு தயாராக இருப்பது உண்மை தான். அதேசமயம் நீங்கள் செய்த நல்ல செயல்கள் ஆயிரமாயிரம் தேவதை களாக உங்களைகாக்கவும் தயார்நிலையில் இருக்கின்றன என்ற பேருண்மையை மறக்கக்கூடாது. ஆகவே, நல்ல செயல்களை செய்வது நன்மையை தருவது மட்டுமின்றி துன்பங்களை தடுத்து நிறுத்தும் என்பது கருத்து.

அ.பொ.

ஆர்கலி-கடல். வெய்யோர்-விரும்புவோர். புத்தேள் நாடு-தேவர் உலகு.

உறழ் வெய்யோர்க்கு உறு செரு எளிது. 2

விளக்கவுரை

வாது செய்து சண்டையிட வருவோர்க்கு போர் எளிதாகும். வாது செய்வோரைத் தேடி போர் வரும் என்பது பொருளாகும்.

அ.பொ.

உறழ்–வாது, சண்டை. வெய்யோர்–விரும்புவோர். உறு–அடையும். செரு–போர்.

ஈரம் வெய்யோர்க்கு நசை கொடை எளிது. 3

விளக்கவுரை

மனத்தில் இரக்ககுணத்தை விரும்பி ஏற்றுக்கொண்டவர்களுக்கு பிறர் விரும்பிக் கேட்கும் பொருளைக் கொடையாகத் தருகின்ற தன்மை எளிதாகும் என்பது பொருளாகும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இரக்கமனம் இருந்தால் கொடைத் தன்மை உண்டு. இதனை முதுமொழிக் காஞ்சி உணர்த்துகிறது.

அ.பொ.

ஈரசம்–இரக்கம். நசை–விருப்பம்.

குறளை வெய்யோர்க்கு மறை விரி எளிது. 4

விளக்கவுரை

கோள் சொல்லும் குணமுடையவர்களுக்கு மற்றவர்கள் இரகசியத்தை பிறர் அறிய வெளிப்படுத்தி விடுதல் எளிதாகம். கோள் சொல்லும் குணம் உடையவன் எந்த ரகசியத்தையும் மறைக்கமாட்டான். ஆகவே, அத்தகையவர்களிடம் வெளிப்படக்கூடாத விஷயங்களைச் சொல்லக் கூடாது என்பது பொருள்.

அ.பொ.

குறளை–கோள் சொல்லுதல். வெய்யோர்–விருப்பம் உடையவர்.

துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது. 5

விளக்கவுரை

ஒரு செயலைச் செய்ய முற்படுவோர் அச்செயலைச் செய்யும் போது உண்டாகும் துன்பத்தை விரும்பி ஏற்றுக்கொள்வர். அப்படி விரும்பி ஏற்கொண்டவர்க்கு செயல் முடிய வரும் இன்பம் எளியதாகும் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. துன்பத்தை விரும்பி ஏற்பவர்களுக்கு இன்பம் எளிதாக வந்தடையும் என்பது கருத்து.

அ.பொ.

வெய்யோர்க்கு-விரும்பி ஏற்பவருக்கு. இன்பம் எளிதாக வரும்.

இன்பம் வெய்யோர்க்கு துன்பம் எளிது. 6

விளக்கவுரை

ஒரு செயலைச் செய்ய மேற்கொண்டு, அதைச் செய்து முடிப்பதில் வெற்றி காண்பதிலேயே விருப்பம் உடையவர்களுக்கு இடையில் வரும் துன்பம் எளிதாகும். முடிவில் வரப் போகின்ற பெரு வெற்றியை நினைவில் கொண்டு இடையில் வரும் துன்பங்களை அறிவுடையோர் விரும்பி ஏற்றுக் கொள்வர். அறிவிலிகள் துன்பத்தில் தகாத சொற்களை, செயல்களை செய்து காரியத்தைக் கெடுத்துக் கொள்வார்கள். ஆகவே, வெற்றி பெறவேண்டுமானால், துன்பத்தை சகிக்கும் உறுதி வேண்டும் என்பது பொருள்.

அ.பொ.

வெய்யோருக்கு-விரும்பி ஏற்பவர்களுக்கு. துன்பம் எளிது- வரும் துன்பம் சுலபமானது.

உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது. 7

விளக்கவுரை

உணவில் மிகுந்த விருப்பம் உள்ளவர்களுக்கு நோய் நொடி வந்தடைவது எளிது என்பனது பொருளாகும். பாண்டவர்கள் ஒவ்வொருவராக இறுதி காலத்தில் மலையிலிருந்து விழுந்து மடிந்தபோது, பீமன் விழுகிறான். அண்ணா... நான் ஏன் விழுகிறேன் என்று கேட்டாள். அதற்கு தருமபுத்திரன் நீ பெருந்தீனி தின்னும் வழக்கம் கொண்டதால் பெரியவர்களை அவமதித்தாய். அதனால் விழுகிறாய் என்று சொன்னார். நோய் மட்டுமல்ல... அறிவும் பெருந்தீனி தின்பவர்களுக்கு மமுங்கும் என்பதை புரிந்து அளவோடு உணவு உண்ணவேண்டும் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அ.பொ.

வெய்யோர்க்கு–விரும்புகிறவர்களுக்கு. உறுபிணி எளிது–நோய் வருவது சுலபம்.

பெண்டிர் வெய்யோர்க்குப் படுபழி எளிது. 8

விளக்கவுரை

பெண் பித்து பிடித்து அலைவோரைக் கொடிதான் பழி பாவம் வந்தடைதல் எளிது பெண் பித்து பிடித்தவர்கள் பொருளை இழப்பவர் புகழை இழப்பர். அருணகிரிநாதர் பெண் பித்து பிடித்து அலைந்தால் பல துன்பங்களை ஆரம்பத்தில் அடைந்தார். ஆகவே பெண் பித்துபிடித்து அலைவதை விடவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

வெய்யோர்–விரும்பினோர். படு–வந்து சேரும். பழி–ஏச்சு பேச்சு.

பாரம் வெய்யோர்க்குப் பாத்தூண் எளிது. 9

விளக்கவுரை

பிறர்படும் துன்பமாகிய சுமையைத் தாமே விரும்பி ஏற்று அவர்க்கு உதவும் உதார குணம் உடையவர்கள் பகுத்துண்டு வாழ்தல் எளிதாகும். பிறர்படும் துன்பத்தை சகிக்காமல் உதவி செய்பவன் தனக்கு கிடைத்ததை பிறருக்குகொடுத்து தானும்உண்பான் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அதாவது, நெஞ்சில் இரக்கம் கொண்டவன் தனக்கு கிடைப்பதை மற்றவர்க்கும் கொடுப்பது மிகவும் எளிதானது என்பதாகும்.

அ.பொ.

பாரம்-சுமை. வெய்யோர்க்கு-விரும்புவோர்க்கு. பாத்தூண்-பகுத்துண்ணல்.

சார்பிலோருக்கு உறு கொலை எளிது. 10

விளக்கவுரை

ஒழுக்கநெறிகளை அல்லது கற்றறிந்த பெரியோர் களை துணையாகக் கொண்டு அவரை சார்ந்திருக்காத தீயோர் கொலைகாரர் ஆவது எளிது. பெரியோர்களின் துணையில்லாத தீயோர் கொலை செய்ய அஞ்சமாட் டார்கள். அது அவர்களுக்கு எளிது என்பது கருத்து.

அ.பொ.

சாா்பிலோர்-சார்ந்திராதவர். உறு-அடைகின்ற.

9. நல்கூர்ந்த பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
முறைஇல் அரசன்நாடு நல்கூர்ந்தன்று. 1

விளக்கவுரை

அலை முழங்கும் கடல் சூழ்ந்துள்ள உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும் முறையாக நீதி செலுத்தி அறநெறி தவாறது ஆட்சி செய்யாத நாடு வறுமையில் வாடும் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஆர்கலி-கடல். மறை-நீதி முறைமை. இல்-இல்லாத

மிக மூத்தோன் காமம் நல் கூர்ந்தன்று. 2

விளக்கவுரை

இன்பம் துய்க்க ஏற்ற பருவம் இளமைப் பருவம். முதுமையில் இன்ப முயக்கு மகிழ்ச்சி தருவது அன்று. வயதில் மூத்தோர் கூடிக் களிப்பது வளமுடையதாகாது. இளமையில் அனுபவகிக்கும் இன்பம்தான் மகிழ்ச்சி தருவது. ஆகவே, இளமையில் திருமணம் முடித்து வாழ வேண்டும். காலம் தாழ்ந்து மணம் முடித்து வாழ்தலை தவிர்க்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

மிக மூத்தவன்-வயதில் மூத்திருப்பவன். நல்கவர்ந்தன்று-வறுமை உடையது.

செற்று உடன் உறைவோனைச் சேர்தல் நல்கூர்ந்தன்று. 3

விளக்கவுரை

மனத்துள்பகை கொண்டு நண்பரைப் போல நடிப்பவருடன் சேர்ந்து வாழுதல் வறுமைப்பட வைக்கும். துன்புறுத்தும். ஆகவே, நடிப்பவர்களை அடையாளம் கண்டு விலக்க வேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

செற்று–பகைகொண்டு. உடன்–தன்னுடனேயே. உறைவோன்–தங்கி இருப்பவன். நல்கூர்ந்தன்று–வறுமை உடையதாகும்.

பிணி கிடந்ததோன் பெற்ற இன்பம் நல்கூர்ந்தன்று. 4

விளக்கவுரை

நோயுற்ற ஒருவன் பெறும் இன்பம் சுவையுடையாகாது. மகிழ்ச்சி தராது. அவன் பெற்ற இன்பம் வெறுமையே. ஆகவே, நோயற்ற வாழ்வுக்கான வழியை தேடவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

பிணி–நோய். நல்கூர்ந்தன்று–மகிழ்ச்சி தராது.

தன் போற்றா வழிப் புலவி நல்கூர்ந்தன்று. 5

விளக்கவுரை

தன்னைப் போற்றி மகிழ்ந்து அன்பு செய்வாருடன் கூடி மகிழும் இன்பமே இனிய சுகம். அப்படி இல்லாமல் தன்னை அன்பு கொண்டு விரும்பாதவருடன் கூடி மகிழ்தல் இன்பம் ஆகாது என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது. உண்மையான அன்பு கொண்டவர்களிடமே நாம் உறவாடவேண்டும் என்பது கருத்து.

அ.பொ.

தன் போற்றாவழி–தன்னைப் போற்றி அன்பு செய்யாதவருடன். புலவி–கூடி மகிழும் இன்பம். நல்கூர்ந்தன்று–மகிழ்ச்சி தராது.

முதிர்வு உடையோன் மேனி அணி நல்கூர்ந்தன்று. 6

விளக்கவுரை

அழகுக்கு அழகு செய்ய அணிமணிகள் புனைந்து கொள்ளலாம். இளமை பருவம் கழிந்த முதுமை பருவத்தில் அணிமணிகள் பூண்டு அலங்கரித்து கொள்ள நினைப்பது வறுமையாகும். அதாவது அணிபவருக்கு அழகு கூடாது என்பது கருத்து.

அ.பொ.

முதிர்வு–முதுமைப் பருவம். மேனி–உடம்பு. அணி–அணியும் நகைகள்.

சொல் செல்லாவழிச் சொலவு நல்கூர்ந்தன்று. 7

விளக்கவுரை

தான் சொல்வதை கேட்காதவர்களிடம் அதை மதிக்காத இடத்தில் ஒன்றை சொல்வது பயனற்றது என்பது பொருள்.

அ.பொ.

சொல் செல்லாவழி–தான் சொல்வதை கேட்காதவர்களிடம். நல்கவர்ந்தன்று–பயனற்றது.

அகம் வறியோன் நண்ணல் நல்கூர்ந்தன்று. 8

விளக்கவுரை

வறுமைப்பட்டவன், நற்குண இயல்பு ஏதும் இல்லாதவன் ஆகியோரை நம்பி அவனை சென்றடைவது கூடாது. மாற்றானை உறவென்று நம்பக்கூடாது என்பது உட்கருத்து.

அ.பொ.

அகம்–உள்ளம், மனம். வறியோன்–வறுமைப்பட்டவன்.

உட்கு இல்வழி சினம் நல்கூர்ந்தன்று. 9

விளக்கவுரை

தன்னை மதிக்காதவரிடம் அல்லது தனக்கு மதிப்புத் தராத இடத்தில் கோபம் கொள்வது பயனற்றது. தன்னையே மதிக்காத ஒருவர் தான்கொண்ட கோபத்தை மதிக்கமாட்டார் என்பது கருத்து.

அ.பொ.

உட்கு-மதிப்பு. இல்வழி-இல்லாதபோது. சினம்-கோபம். நல்கூர்ந்தன்று-வறியது.

நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று. 10

விளக்கவுரை

ஒருவர் நட்பாக இல்லாத நிலையில் ஏதேனும் உதவி பெறும் பொருட்டு அவரிடம் செல்லுதல் வறுமைப் பட்டவையே ஆகும். அதாவது அப்படி செல்வது பயன் தராது என்பது கருத்து.

அ.பொ.

நட்பில்-நட்பு இல். வழிச்சேறல்-அவரிடம் செல்லல்.

10. தண்டாப் பத்து

ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான். 1

விளக்கவுரை

ஒலி செய்யும் அலைகளை உடைய கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் இருக்கும் மனிதரில் உயர்ந்த புகழை அடைய விரும்புவோன், பிறரை உயர்த்தும் புகழ் மொழிகளைப் போற்றி களை கூறுவதைத் தவிர்க்க மாட்டான்.

அ.பொ.

ஆர்கலி–கடல். ஓங்கல்–உயர்வு.

வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான். 2

விளக்கவுரை

வாழ்வில் செல்வவளமெல்லாம் பெற்று புகழோடு மேம்பாடடைய விரும்பும் ஒருவன் அத்தகைய மேன்மை பெருக்கத்தை அடைவதற்கான பல்லாற்றாலும் புகழ் கொடுக்கும் நற்செயல்களைத் தவிர்க்கமாட்டான். புகழ் பெறவேண்டுமானால் நல்ல செயல்களை மலைபோல் குவிக்க வேண்டும் என்பது.

அ.பொ.

வீங்கல்–தண்டித்தல். ஓங்கல்–உயர்வு.

கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான். 3

விளக்கவுரை

கல்வி கேள்விகளில் சிறந்தோங்கி விளங்க விரும்பும் ஒருவன் கற்பிக்கும் ஆசிரியனைப் பணிந்து பாடம் கேட்கத் தயங்கமாட்டான் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.

அ.பொ.

வழிபாடு–வணக்கம். தண்டல்–நீங்குதல்.

நிற்றல் வேண்டுவோன் தவம்செயல் தண்டான். 4

விளக்கவுரை

வாழ்க்கை நிலையாமையை உணர்ந்து துறவு நெறியில் செல்ல விரும்புபவன், ஊன் உருக்கி, உள்ளொளி பெருக்கி, புலனடக்கி, ஊண் உறக்கம் தவிர்த்து, மெய் வருந்த மேற்கொள்ள வேண்டிய தவத்தை செய்வதிலிருந்து நீங்கமாட்டான் என்பது பொருளாகும். தவமே மரணத்தை வெல்லும் என்பதால் தவறி தவத்தை எந்த நிலையிலும் விடமாட்டார் என்பது கருத்து.

அ.பொ.

தவம் செயல்–தவம் செய்வதிலிருந்து. தண்டான்–நீங்க மாட்டான்.

வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான். 5

விளக்கவுரை

மேலான நல்வாழ்வை விரும்புபவன் அத்தகைய வாழ்வை அடைவதற்கான வழிகளை, உபாயங்களைப் பற்றிச் சிந்தித்து அதன்படி நடக்க தவறமாட்டான் என்னபது பொருளாகும்.

அ.பொ.

சூழ்ச்சி–வழிமுறை. வாழ்க்கை–வாழ விரும்புபவன்.

மிகுதி வேண்டுவோன் வருத்தம் தண்டான். 6

விளக்கவுரை

பெரிய சாதனைச் செய்ய அல்லது திரண்ட செல்வத்தை சேர்க்க விரும்புபவன் அந்த எண்ணம் ஈடேற எடுக்கும் முயற்சிகளின் இடையே வரும் வருத்தம், துன்பத்தைக் கண்டு முயற்சியைக் கைவிடமாட்டான் என்பது பொருளாகும்.

அ.பொ.

மிகுதி–அதிகம். வேண்டுவோன்–செய்ய விரும்புவோன்.

இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான். 7

விளக்கவுரை

இன்பம் அடையவேண்டும் என்று ஆசைப்பட்டவன் அதை அடையும் வழியில் குறுக்கிடும் துன்பத்தை ஒரு பொருட்டாக நினைத்து முயற்சியில் இருந்து ஒரு போதும் நீங்கமாட்டான்.

அ.பொ.

இன்பம் வேண்டுவோன்–இன்ப வாழ்வை அடைய விரும்புபவன். துன்பம்–குறுக்கீடுகளால் வரும் துன்பம்.

துன்பம் வேண்டுவோன் இன்பம் தண்டான். 8

விளக்கவுரை

ஒன்றைச் செய்ய முற்படுகிறபோது எதிர்வரும் துன்பத்தைக் கண்டு துவண்டு, முயற்சியை கைவிட்டு விடாமல், அந்த துன்பத்தை விரும்பி ஏற்றுக் கொண்டு, மேலும் முயலுபவன் அடுத்து வரும் இன்பத்தை அடைய தவறமாட்டான் என்பது பொருளாகும்.

அ.பொ.

துன்பம்–துயரம். வேண்டுவோன்–முயல்பவன்.

ஏமம் வேண்டுவோன் முறை செயல் தண்டான். 9

விளக்கவுரை

குடிமக்களை பஞ்சம், பகை போர் இவைகளிலிருந்து பாதுகாத்த நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்ய ஆசைப்படும் அரசன் மக்களுக்கு நீதிமுறை தவறாது அரசாள்வதிலிருந்து நீங்க மாட்டான் என்பது பொருளாகும்.

அ.பொ.

ஏமம்–பாதுகாப்பு. முறைசெயல்–நீதி செலுத்துதல்.

சாமம் வேண்டுவோன் குறிப்புச் செயல் தண்டான்.10

விளக்கவுரை

பெண்ணோடுகூடி மகிழ்ந்து இன்புறுதலை விரும்புபவன் விரும்பிய பெண்ணின் குறிப்பறிதலில் இருந்து நீங்கான் என்பது பொருளாகும். பெண் இன்பத்தை விரும்புபவன் பெண்கள் செய்யும் குறிப்புகளை மிகச் சரியாக கணிப்பவனாக இருப்பான். பெண் மோகம் அவனை அப்படி செய்ய வைக்கிறது என்பது கருத்து.

அ.பொ.

காமம்–ஆசை. குறிப்பு செயல்–குறிப்பால் உணர்த்தும் செயல்.

❑ ❑ ❑

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

"திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்."

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

"நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்."

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

"பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!"

– கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

"நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து 'ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது' எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா."

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.